www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## ஒன்பதாம் வகுப்பு

பதிவு எண் :

## சமூக அறிவியல்

நேரம் : 3.00 மணி

பகுதி - அ

மதிப்பெண்கள் : 100

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 14 x 1 = 14

1. பரிணாம வளர்ச்சி வரிசையில் நவீன மனிதனின் நேரடி முன்னோர் ________ ஆவர்.
   அ) ஹோமோ ஹேபிலிஸ் ஆ) ஹோமோ எரக்டஸ்
   இ) ஹோமோ சேபியன்ஸ் ஈ) நியாண்டர்தால் மனிதன்
2. எகிப்தியர்கள் இறந்த உடல்களை பதப்படுத்தி பாதுகாத்த முறை ________.
   அ) சார்கோபகஸ் ஆ) ஹைக்சோஸ் இ) மம்மியாக்கம் ஈ) பல கடவுள்களை வணங்குதல்
3. சேரர்களைப் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு எது?
   அ) புகளூர் ஆ) கிர்நார் இ) புலிமான்கோம்பை ஈ) மதுரை
4. மும்மணிகள் (திரி ரத்னா) என்ற மூன்று கொள்கைகளை போதித்தவர் ________.
   அ) புத்தர் ஆ) மகாவீரர் இ) லாவோட்சே ஈ) கன்ஃபூசியஸ்
5. கிரேக்கர்களின் மற்றொரு பெயர் ________ ஆகும்.
   அ) ஹெலனிஸ்டுகள் ஆ) ஹெலனியர்கள் இ) பினிசியர்கள் ஈ) ஸ்பார்ட்டன்கள்
6. புவித்தட்டுகளின் நகர்வு ________ ஆற்றலை வெளிப்படுத்துகிறது.
   அ) நீர் ஆற்றல் ஆ) வெப்ப ஆற்றல் இ) அலையாற்றல் ஈ) ஓத ஆற்றல்
7. காற்றின் படியவைத்தலால் உருவாக்கப்படும் மென்படிவுகளைக் கொண்ட நிலத்தோற்றம் ________ ஆகும்.
   அ) காற்றடி வண்டல் ஆ) பர்கான் இ) ஹமாடா ஈ) மணல் சிற்றலைகள்
8. ________ செம்மறி ஆட்டு மேகங்கள் என்று அழைக்கப்படுகிறது.
   அ) இடைப்பட்ட திரள் மேகங்கள் ஆ) இடைப்பட்ட படை மேகங்கள்
   இ) கார்படை மேகங்கள் ஈ) கீற்றுப் படை மேகங்கள்
9. பெருங்கடலின் வெப்பநிலை ஆழத்தை நோக்கிச் செல்லச் செல்ல ________.
   அ) அதிகரிக்கும் ஆ) குறையும் இ) ஒரே அளவாக இருக்கும் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
10. உயிர்க்கோளத்தின் மிகச் சிறிய அலகு அ) சூழ்நிலை மண்டலம்
    ஆ) பல்லுயிர்த் தொகுதி இ) சுற்றுச்சூழல் ஈ) இவற்றில் எதுவும் இல்லை
11. ஆபிரகாம் லிங்கன் ________ நாட்டின் ஜனாதிபதியாக இருந்தார்.
    அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆ) இங்கிலாந்து
    இ) சோவியத் ரஷ்யா ஈ) இந்தியா
12. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி தகவலைப் பெறுவதற்கான கால வரம்பு ________.
    அ) 20 நாட்கள் ஆ) 25 நாட்கள் இ) 30 நாட்கள் ஈ) 35 நாட்கள்
13. ஜி-8 நாடுகளின் கூட்டமைப்பின் உறுப்பு நாடுகளில் இல்லாத நாடு
    அ) ஜப்பான் ஆ) கனடா இ) ரஷ்யா ஈ) இந்தியா
14. மூன்றாம் துறையில் அடங்குவது
    அ) போக்குவரத்து ஆ) காப்பீடு இ) வங்கியல் ஈ) அனைத்தும்

பகுதி - ஆ

II. ஏவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 28 கட்டாய வினா) 10 x 2 = 20

15. வரலாற்றுக்கு முந்தைய காலத் தமிழக மக்களின் வாழ்வில் கால்நடை வளர்த்தல் ஏற்படுத்திய தாக்கம் பற்றி குறிப்பு தருக.
16. சிகுரட்களின் முக்கியமான பண்புகளைக் கூறுக.
17. சங்ககாலத்தில் விவசாயம் ஒரு முக்கியமான வாழ்வாதாரமாக இருந்தது. இதற்கான காரணங்களைக் கூறுக.
18. மும்மணிகள் (திரி ரத்னா) - இச்சொல்லை விளக்கிக் கூறு.
19. புனித சோபியா ஆலயம் பற்றி எழுதுக.
20. எரிமலை என்றால் என்ன? அவற்றின் கூறுகள் யாவை?
21. குறுட்டு ஆறு என்றால் என்ன?
22. சூழ்நிலை மண்டலம் என்றால் என்ன?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



23. மக்களாட்சி அரசாங்க அமைப்பினைப் பற்றி கூறுக.
24. இந்தியாவிலுள்ள தேர்தல் முறை பற்றி விவரி.
25. போக்சோ (POCSO) - வரையறு.
26. பொருளாதார மேம்பாட்டின் குறியீடுகள் என்ன?
27. பொருளாதாரத்திலுள்ள மூன்று துறைகள் யாவை?
28. சூரிய சக்தி என்றால் என்ன?

பகுதி - இ

III. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 42 கட்டாய வினா) 10 x 5 = 50

29. ***கோடிட்ட இடங்களை நிரப்புக.***
 1. மௌரியர் காலத்தில் ஆட்சிக்கலை மற்றும் பொருளாதாரம் குறித்து கௌடில்யர் எழுதிய நூல் _______ ஆகும்.
 2. கிரேக்கர்கள் _______ என்ற இடத்தில் பாரசீகர்களைத் தோற்கடித்தனர்.
 3. _______ புவியின் முக்கிய ஆற்றல் மூலமாகும்.
 4. 2017 ல் அங்கீகரிக்கப்பட்ட தேசிய கட்சிகளின் எண்ணிக்கை _______.
 5. நிலத்தடி நீர் என்பது _______ வளங்களின் ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

30. ***பொருத்துக.***

| | | |
|---|---|---|
| 1. பொதுத்துறை | - | டெரிஸ் |
| 2. கவசம் | - | ஒரு வகையான புல் |
| 3. உலக பேராழியியல் தினம் | - | சிமா |
| 4. சிவப்பு மணல் குன்றுகள் | - | சேவை நோக்கம் |
| 5. பாப்பிரஸ் | - | ஜூன் 8 |

31. சிந்துவெளி நாகரீகத்தின் மறைந்த பொக்கிஷங்களைப் பற்றி எழுதுக.
32. சங்ககாலத்தில் தொழில்களும் கைவினைக் கலைகளும் எவ்வாறு பொருளாதாரத்தை மேம்படுத்தின?
33. சமண, புத்த சமயக் கொள்கைகளுக்கு இடையேயான ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் எழுதுக.
34. செவ்வியல் காலத்தில் இந்தியாவின் நிலை குறித்து எழுதுக.
35. ***அ) வேறுபடுத்துக:***
 i) கருவம் மற்றும் மேலோடு ii) வானிலை மற்றும் காலநிலை

 ***ஆ) காரணம் கூறுக*** : உற்பத்தியாளர்கள், தற்சார்பு ஊட்ட உயிரிகள் என்று அழைக்கப்படுகின்றன.
36. புவி அமைப்பை விவரி.
37. பனியாறு என்றால் என்ன? அதன் வகைகளை விவரி.
38. மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை?
39. அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள் யாவை?
40. ஏதேனும் 5 சுற்றுச்சூழல் சட்டங்களையும் அவற்றின் செயல்களையும் விவரி.
41. பொதுத்துறையையும், தனியார் துறையையும் வேறுபடுத்துக.
42. ***உலக வரைபடத்தில் குறிக்கவும் :***
 1) இந்தியப்பெருங்கடல் 2) ஐரோப்பா 3) ஆர்டிக் கடல் 4) ஆஸ்திரேலியா 5) கனடா

பகுதி - ஈ

IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளி. 2 x 8 = 16

43. அ) மனிதர்களின் வரலாறு பூமியின் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு உடையது - தெளிவுபடுத்துக. ***(அல்லது)***

 ஆ) சூறாவளிகள் எவ்வாறு உருவாகின்றன? அதன் வகைகளை விவரி.
44. ***உலக வரைபடத்தில் குறிக்கவும்.***
 1) பசிபிக் நெருப்பு வளையம் - 1 2) செயல்படும் எரிமலை - 1
 3) ஆல்ப்ஸ் மலை 4) காவிரி டெல்டா 5) வெப்பப் பாலைவனம் 6) கிரீன்லாந்து
 7) ஆசியா 8) அட்லாண்டிக் பெருங்கடல் ***(அல்லது)***
 1) இமயமலை 2) புவி அதிர்ச்சி மண்டலம் 3) சகாரா பாலைவனம்
 4) பசுபிக் பெருங்கடல் 5) எகிப்து 6) சீனா 7) சுந்தரவனம்
 8) உறங்கும் எரிமலை-1

*******

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com